நாள். 07.05.2021

அ.வெ.எண்: 248

# செய்தி வெளியீடு – 7.5.2021

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்தான ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாட்டில் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவது குறித்தும், உயிரிழப்புகளை குறைப்பது பற்றியும், அனைத்து மருத்துவமனைகளிலும் சிகிச்சை வசதிகள் தங்குதடையின்றி கிடைப்பதை உறுதி செய்வது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (7.5.2021) அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்களுடன் கலந்தாலோசித்தார்கள்.

இக்கூட்டத்தில், நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் மருத்துவத் துறையும், காவல் துறையும், வருவாய்த் துறை மற்றும் உள்ளாட்சித் துறைகளும் முழுமையாக இணைந்து செயலாற்ற வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். இறப்புகளைக் குறைத்திட அரும்பாடுபட்டுவரும் மருத்துவர்களும், செவிலியர்களும் தமது சீரிய பணியை தொடர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்கள். அனைத்து மருத்துவமனைகளிலும், மருந்துகள், ஆக்சிஜன் போன்றவை தங்குதடையின்றி தொடர்ந்து கிடைத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், தடுப்பூசி போடுவதில் மருத்துவத் துறையினர் மேலும் முனைப்புடன் செயல்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல் துறை கண்காணிப்பாளர்களும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் தலைமையில் கூடுதல் கவனம் செலுத்தி பணியாற்ற வேண்டும் எனவும், இந்த இக்கட்டான சூழ்நிலையை அனைவரது கூட்டு முயற்சியினால் மட்டுமே வெல்ல இயலும் எனவும் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் திரு.வெ.இறையன்பு, இ.ஆ.ப., காவல் துறை தலைவர் திரு. ஜெ.கே.திரிபாதி, இ.கா.ப., மற்றும் பிற அரசுத் துறை செயலர்கள், மருத்துவ நிபுணர் குழுவினர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை சென்னை-09